# திருத்தப்பட்டது.

செ.வெ.எண்:14 நாள்:07.01.2017

# அரியலூர் மாவட்டத்தில், முதற்கட்டமாக வாரணவாசியில் பொங்கல் திருநாளையொட்டி விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு ஆணைக்கிணங்க, **பொங்கல் பண்டிகையை** முன்னிட்டு அரியலூர் மாவட்டம், **வாரணவாசி** நியாயவிலைக்கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு **"விலையில்லா வேட்டி சேலைகள்"** வழங்கும் நிகழ்ச்சி அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (07.01.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக வாரணவாசி நியாயவிலைக்கடையில் **738** அரிசி குடும்ப அட்டைாரர்களுக்கு விலையில்லா வேட்டி சேலைகளை வழங்கி துவங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசால் தகுதியான அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் ஒவ்வொரு பொங்கல் பண்டிகைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. **2017 பொங்கல் பண்டிகையை** முன்னிட்டு அரியலூர் மாவட்டத்தில் **1,95,517** பயனாளிகளுக்கு **விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள்** வழங்கப்படவுள்ளது. **1,66,052 சேலைகள் மற்றும் வேட்டிகள்** வழங்க தயார் நிலையில் உள்ளது.

இந்நிகழ்ச்சியில், கோட்டாட்சியர் (அரியலூர்) திரு.மோகனராஜன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) திருமதி.மங்கலம், வட்டாட்சியர் திரு.முத்துகிருஷ்ணன் (அரியலூர்) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**